**CC.No.223/2021**

**P.W.1**

| | | |
|---|---|---|
| திருமதி. இசக்கியம்மாள் | க/பெ. ராஜகுமார் | Date: 23.06.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. சாட்சி பேச்சியம்மாள் என் கணவரின் தம்பி மனைவி ஆவார். சாட்சி ராஜ்குமார் எனது கணவர். என் கணவரும் சாட்சி வெங்கடேஷ் ஆகியோர் பத்திர எழுத்தர் அலுவலத்தில் வேலை செய்கிறார்கள். சாட்சி வெங்கடேஷ் என் உறவினர். ராஜ்குமார் அப்பாவும் சாட்சி மணிகண்டன் அப்பாவும் உடன்பிறந்த சகோதரர்கள். புகாரில் சொல்லியுள்ள இடப் பிரச்சனை எங்களுக்கு பூர்விக சொத்து ஆகும். பூர்விக சொத்து குறித்து எனது மாமனார் எனது கணவருக்கு எதிரிகள் சொத்துக்களை உட்படுத்தி உயில் எழுதி கொடுத்தாக புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

2. 2008 ம் ஆண்டு வள்ளியூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 252/2008 ஆக வழக்கில் எதிரி எனது மாமனார், கணவர், கொழுந்தன் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இடப் பிரச்சனை சம்பந்தமாக உள்ள வழக்கு தற்போது வரை முடிவு வரவில்லை என்றால் சரிதான். இடப் பிரச்சனை சம்பந்தமாக தீர்ப்பு ஆனது என்று சொல்லப்பட்டது என்றால் அது தவறு. நான் போலீசில் புகார் கொடுத்த போது சிவில் வழக்கு நடந்து வருவதாக சொல்லி தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவை உதவி ஆய்வாளர் எழுதினார்.

3. சம்பவதன்று போலீஸார் சம்பவ இடத்திற்கு 11.00 மணிக்கு வந்தார்கள். அப்போது போலீசாரிடம் நடந்த விபரத்தை சொன்னேன். அப்போது போலீசார் நான் சொல்லிய விவரத்தை எழுதினார்களா என்றால் எழுதி இருப்பார்கள்.

போலீஸ் 11.00 மணிக்கு பின்னர் விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். மறுநாள் இரவு 7.00 மணியளவில் விசாரித்தார்கள். அப்போது போலீஸ் விசாரித்து வாக்குமூலம் எழுதினார்கள். அதில் நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

4. நான் முதல் விசாரணையில் எங்கள் வீட்டில் தகர கதவு, பேன், சுவரில் இருந்த டைல்ஸ் ஆகியவற்றை வெட்டி சேதப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். பேன் வீட்டின் முதல் அறையில் இருந்தது. உடைக்கப்பட்டதாக சொல்லும் பேன் வீட்டின் மேலே மாட்டப்பட்டிருந்தது. சுவற்றில் உள்ள டைல்ஸ் உடைக்கப்பட்டது. தகர கதவை மேலிருந்து கீழாக பாதியாக கீறினார். மேற்படி தகர கதவு இரண்டாக பிரிந்தது. தற்போது வரை மேற்படி கதவு சரிசெய்யவில்லை.

5. போலீஸ் விசாரணையில் உடைந்த பொருட்களை புகைப்படம் எடுத்தார்கள். சம்பவதன்று புகைப்படம் எடுத்தார்கள். போலீசார் உடைந்த பொருட்களை எடுத்து செல்லவில்லை. எங்கள் வீட்டில் 3 அறை உள்ளது. வழக்கு சம்பவம் எந்த அறையில் நடந்தது என்றால் 3 அறையிலும் நடந்தது. என் சத்தம் கேட்டு தான் பேச்சியம்மாள் வந்தார் என்றால் சரிதான். பேச்சியம்மாள் வரும் போது ஆஜர் எதிரி இல்லை என்றால் சரியல்ல. வீட்டின் வெளியே நின்று ஏசி கொண்டிருந்தார். எங்கள் தெருவில் 52 வீடு உள்ளது.

6. சம்பவதன்று 2,3 நபர்கள் வந்தார்கள். சில நபர்கள் தள்ளி தள்ளி நின்று பார்த்தார்கள். போலீஸாரிடம் ஒரு கையெழுத்து செய்து கொடுத்தேன். என் கணவருக்கு சம்பவத்தை குறித்து 11.30 மணிக்கு தகவல் சொன்னேன். எங்கள் வீட்டிற்கு கிழக்கே எதிரி மணிகண்டன் வீடு உள்ளது. என் வீட்டியிலிருந்து 3 வது வீடு பெரியசாமி வீடு ஆகும். பெரியசாமி வீடு தென் வடல் முடுக்கிற்கு கிழக்கே என்றால் சரிதான். பேச்சியம்மாள் வீடு எங்கள் வீட்டிற்கு எதிர் வரிசையில் உள்ளது.

7. பேச்சியம்மாள் வீட்டின் முன் வாசல் வடக்கே உள்ளது. சாட்சி வெங்கடேஷ் வீடு என் வீட்டிற்கு எதிர் வரிசையில் உள்ளது என்றால் சரிதான். சாட்சி வெங்கடேஷ் மற்றும் என் கணவரும் 25 வருடங்களாக பத்திர அலுவலத்தில் எழுத்தராக உள்ளார்கள். சாட்சி கல்யாணியை எனக்கு தெரியாது. என் கணவர் எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்தை உயில் மூலமாக எழுதி கொண்டார் என்றாலும், இது சம்பந்தமாக 2008 முதல் வழக்கு உள்ளது என்றாலும், அந்த வழக்கு எதிரிக்கு சாதமாக முடியும் தருவாயில் உள்ளது என்றால் எதிரி மீது பொய் வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH
Digitally signed by MOSES JEBASINGH
Date: 2025.06.23 20:08:39 +0530

Judicial Magistrate,
Valliyoor.